**அ.வ.எண்.13/2023**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 13/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : சரவணன் | த/பெ. | : ஆண்டியப்பன் (எ) ராசு |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : உலுப்பகுடி |
| தேதி | : 16.02.2026 | வயது | : 49/2026 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். இவ்வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 17.12.1989 ம் தேதிய வழக்கு சொத்திற்குரிய எனது தாயார் பெயரிலுள்ள பட்டா அசல் (மனைவரி பட்டா எண். 750) - வா.சா.ஆ.1 ஆகவும்,

2) வழக்கு சொத்திலுள்ள வீட்டிற்கு நான் செலுத்திய வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை- 5) அசல் - வா.சா.ஆ.2 ஆகவும்,

(11.10.2010 ம் தேதிய எனது தகப்பனார் ராசு என்ற ஆண்டியப்பன் என்பவரின் இறப்பு

சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, ராசு என்ற ஆண்டியப்பன் வாரிசு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நகலகங்களாக இருப்பதால் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யவில்லை. அசலானது பிரதிவாதிகள் வசம் உள்ளதாக எடுத்துரைக்கப்பட்டது.)

3) 06.02.2021 ம் தேதிய எனது பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் கணிணி பட்டா (பட்டா எண்.313) கணிணி நகல் - வா.சா.ஆ.3 ஆகவும்,

4) வழக்குச் சொத்திற்கு எனது தகப்பனார் பெயரிலுள்ள மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை-10) அசல் - வா.சா.ஆ.4 ஆகவும்,

5) 29.03.2023 ம் தேதிய வழக்கு சொத்து எனது பாட்டனார் பெரியகருப்பன் என்பவர் பெயரிலுள்ள கூட்டுப்பட்டா (பட்டா எண்.2234) கணிணி நகல் - வா.சா.ஆ.5 ஆகவும்,

6) எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) - வா.சா.ஆ.6 ஆகவும்,

7) வழக்கு சொத்து முகவரியில் உள்ள வீட்டில் குடியிருந்ததை காட்டக்கூடிய பழைய குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) - வா.சா.ஆ.7 ஆகவும்,

8) 23.01.1998 முதல் 28.01.2008 வரை எனக்கு வழங்கப்பட்டுள்ள கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) ஒப்பீட்டு நகல் - வா.சா.ஆ.8 ஆகவும்,

9) 15.06.2007 முதல் 14.06.2017 வரை எனக்கு வழங்கப்பட்டுள்ள கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) ஒப்பீட்டு நகல் - வா.சா.ஆ.9 ஆகவும்,

10) 02.11.2016 முதல் 01.11.2026 வரை எனக்கு வழங்கப்பட்டுள்ள கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) ஒப்பீட்டு நகல் - வா.சா.ஆ.10 ஆகவும்,

11) 23.04.2019 ம் தேதிய எனது ஓட்டுநர் உரிமம் ஒப்பீட்டு நகல் - வா.சா.ஆ.11 ஆகவும்,

12) 20.01.2026 ம் தேதிய வழக்கு சொத்திற்கான புல வரைபடம் கணிணி நகல் - வா.சா.ஆ.12 ஆகவும்,

13) நான் 1 ம் பிரதிவாதியின் கல்லூரி விடுதி முகவரிக்கு அனுப்பிய கடிதத்தின் உறை மட்டும் (எண்ணிக்கை-2) அசல் - வா.சா.ஆ.13 ஆகவும்,

14) நான் 6 ம் பிரதிவாதியின் விடுதி முகவரிக்கு அனுப்பிய கடிதத்தின் உறை மட்டும் அசல் - வா.சா.ஆ.14 ஆகவும்,

15) 26.10.2024 ம் தேதிய 1 முதல் 6 பிரதிவாதிகள் நத்தம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எனக்கு வழங்கப்பட்ட நகல் - வா.சா.ஆ.15 ஆகவும்,

16) வழக்கு சொத்திலுள்ள வீட்டிற்கு என் தகப்பனார் பெயரிலுள்ள மின் இணைப்பிற்கு நான் கட்டிய மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை-11) இணையதள பதிவிறக்க நகல்கள் - வா.சா.ஆ.16 ஆகவும்,

17) எனது வீட்டு முகவரிக்கு வழங்கப்பட்ட எரிவாயு இணைப்பு கார்டு (ஒப்பீட்டு நகல்) - வா.சா.ஆ.17 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

( வா.சா.ஆ.15 ஆவணமான முதல் தகவல் அறிக்கை வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு உள்ள ஆவணம் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது, அதேபோல் வழக்கு சொத்தானது கதவு எண்.1/203 என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், வாதியின் பாஸ்போர்ட், வீட்டுவரி ரசீது ஆகியவற்றில் கதவு எண்.203 என்று உள்ளதால் மேற்படி ஆவணங்கள் வழக்கு சொத்திற்கானது கிடையாது என்று ஆட்சேபணை

செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபணைகள் குறித்து வழக்கின் விசாரணையின் இறுதியில் தீர்மானிக்கப்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.)

**வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 16.02.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.16 15:22:22 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

அ.வ.எண்.13/2023